IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.271/2016
DEPOSITION OF WITNESS

வா.சா. 5சாட்சி செந்தில்குமார் த.பெ.ராசுதேவர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif on 30.06.2026 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வாதி எனது வீட்டிற்கு அடுத்த வீட்டில் குடியிருக்கிறார். 35 ஆண்டு பலக்கம் என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்த வழக்கு எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்திற்கு அவர் பெயரில் பட்டா வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தானது அம்மச்சியார் கோயிலுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். சொத்து யாருக்கு பாத்தியப்பட்டதோ அவர்கள் பெயரில்தான் பட்டா இருக்கும் என்றால் சரிதான்.

2. கோயிலுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கோயிலுக்கு யார் ஊழியம் செய்து வருகிறார்களோ அவர்களே அனுபவம் செய்வார்கள் என்றால் சரிதான். யார் ஊழியம் மாறினாலும் பட்டா கோயில் பெயரில்தான் இருக்கும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் தயார் செய்தது யார் என்றால் வாதி எழுதினார். வாதி எழுதியதை நான் கையெழுத்து செய்து கொடுத்தேன். நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட விபரங்கள் வழக்கிற்கு பொருந்தாது என்றால் சரியல்ல. வாதி எனக்கு நண்பர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.06.30 13:20:55 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருமங்கலம்.